2010 ஏப்ரல் 8] [திரு. தங்கம் தென்னரசு]

கொடுப்பது என்பதே கிடையாது. நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வு என்பது, முற்றிலும் எதிர்பாராத நிகழ்வு. மாணவர்கள் இப்போதுதான் அந்தத் தேர்வுகளுக்குத் தயார் செய்திருக்கிறார்கள். மீண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கிறபொழுது, நாளைக்குக் காலையிலேயே எழுதுங்கள் என்று சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் கொடுத்துவிட்டுச் செய்ய இருக்கிறோம். ஏற்கெனவே அந்த மாணவர்கள் தயார் செய்திருக்கிறார்கள். நான் நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. இருக்கக்கூடிய சூழ்நிலை இந்த நிலையிலே இருக்கிறது. எனவே, இதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

6. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எழுபத்தாறாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பேரவைக்குள் உறுப்பினர்கள் தண்ணீர் பருகுவதற்கு அனுமதித்தல் மற்றும் உறுப்பினர்களின் வாகனங்களை வளாகத்தின் அனைத்து வழிகளிலும் அனுமதித்தல்

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. இங்கே மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்ட அமைச்சர்களும், உறுப்பினர்களும் இருக்கின்றோம். ஆகவே, நீங்கள் தயவுசெய்து இங்கே தண்ணீர் அருந்துவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.